முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி பி.கவிதா, பி.ஏ.,எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

வா.சா. 1 நாள்.07.09.2023

| OS. No. | 97/2022 | | |
|---|---|---|---|
| பெயர் | கரும்பாயிரம் | த/பெ. | |
| வய | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பிறந்த தேதி 3.07.1962 ல் பிறந்தேன். நான் கிராம உதவியாளராக இருந்து 31.07.2022 ல் ஓய்வு பெற்றேன். நான் எந்த தேதியில் பணியில் சேர்ந்தேன் என்றால் 1987 ல் சேர்ந்தேன். தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் எந்த எந்த ஊர்களில் கிராம உதவியாளராக பணியில் இருந்தேன் என்றால் நான் மயிலாடுதுறை தாலுக்கா, காஞ்சிவா கிராமத்தில் சேர்ந்து இடையில் நல்லத்துகுடியில் பணியில் இருந்து இறுதியாக காஞ்சிவா கிராமத்தில் ஓய்வு பெற்றுவிட்டேன். பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் கும்பகோணத்தில் கிராம நிர்வாக அலுவலர் ஜோதி நாயகம் என்கிற சங்கத்தில் மாநில பொறுப்பாளராக இருந்ததால் அவரை பார்க்க செல்லும் போது பிரதிவாதி எனக்கு பழக்கம். பிரதிவாதி வீட்டில் ஜோதி நாயகம் குடியிருந்தார். பிரதிவாதி கும்பகோணத்தில் எந்த தெருவில் குடியிருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. ஜோதி நாயகம் எந்த தெருவில் குடியிருந்தார் என்றால் என்று ஞாபகம் இல்லை. அவர்கள் ஒரே தெருவில் முன்பக்கம் பிரதிவாதியும், பின்பக்கம் ஜோதிநாயகம் குடியிருந்தார்கள். நான் 10 ஆண்டுகளாக அவரை சென்று பார்த்து வந்தேன். 7 ஆண்டுகளாக அவர் எனக்கு பழக்கம். பிரதிவாதி குடும்பத்தில் பிரதிவாதியும், மஞ்சுளா மற்றும் மணிமாறன் உள்ளார்கள். மணிமாறன் பிரதிவாதியின் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார். மஞ்சுளா மேற்கே கடைசியாக குடியிருந்தார். மணிமாறன் வீட்டில் தான் ஜோதிநாயகம் குடியிருந்தார்எ ன்றால் சரிதான். மணிமாறனுக்கும், ஜோதிநாயத்திற்கும் நல்ல பழக்கம் உண்டு. இந்த வழக்கில் பிரதிவாதி என்ன கட்சி எழுப்பிள்ளார் என்று படித்து பார்க்கவில்லை. ரூ.20,000/-த்திற்கு மேல் ரொக்கமாக கடன் கொடுக்க கூடாது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கடன் கேட்டு கொடுத்ததாக

செல்லும் தேதி **08.04.2020** ஆகும். எவ்வளவு ரூபாய் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் ரூ.**5,00,000**/- கொடுத்ததாக சொல்கிறேன். கடன் கொடுத்ததாக சொல்வது யார் யாருக்கு தெரியும் என்றால் கணேசமூர்த்தி, ஆரோக்கிசாமி மற்றும் பரசுராமனுக்கு தெரியும். கடன் பத்திரம் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் தட்டச்சு செய்யப்பட்டது. எங்கு யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் பிரதிவாதி தான் தட்டச்சு செய்து எடுத்து வந்தார். மணிமாறனுக்கு அவரது தாயாருக்கும் அவருக்கும் வழக்கு நடந்தது என்றால் நான் பணம் கொடுத்த பிறகு நடக்கவில்லை. அதற்கு பின்னர் நடந்தது. கணேசமூர்த்தி கும்பகோணத்தை சேர்ந்தவர். ஆரோக்கிய சாமி புதுார், மேலஅகலன்கண் ஊராகும். பரசுராமன் நரசிங்க பேட்டையை சேர்ந்தவர். மேற்படி **3** நபர்கள் தான் சாட்சிகளாக இரவு **7.30** மணிக்கு கையெழுத்து போட்டார்கள். பரசுராமன் தந்தை பெயர் என்ன எ ன்றால் பணம் வாங்கியவர் தான் அவரை அழைத்து வந்தார் என்பதால் பரசுராமன் என்பவரின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. சாட்சிகளாக போட்ட மூன்று நபர்களில் எனக்கு தெரிந்தவர்கள் யார் யார் என்றால் அந்த மூன்று நபர்களையும் தெரியும். ஆரோக்கியசாமி மயிலாடுதுறை வழக்கறிஞர் திரு சங்கர் கணேஷ் என்பவரிடம் எழுத்தராக உள்ளார். கணேச மூர்த்திக்கு என்ன தொழில் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு என்ன வயது என்றால் **75** வயதிருக்கும். பிரதிவாதி எனக்கு யார் என்று தெரியாது என்றும், பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி ஒருபோதும் கடனுறுதி சீட்டை தட்டச்சு செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூபாய் **5** லட்சம் கேட்க வில்லை என்றாலும், அதை என்னிடம் கடனாக பெற்று கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகள் மூவரும் ஒரே பேனாவால் தான் கையெழுத்து போட்டார்கள். வா சா ஆ **1**ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றால் அது அவருடைய கையெழுத்து தான். வழக்கிற்கு முன்பாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். என்னிடம் காண்பிக்கப்படும் அஞ்சல ஒப்புதல் அட்டை பிரதிவாதி அந்த அறிவிப்பை பெற்று கொண்டதற்கானது என்றால் சரிதான். அந்த ஒப்புதல் அட்டை வா சா **5** ஆகும். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குறையல் உள்ள கையெழுத்து பிரதிவாதி உடையது தான். வா சா ஆ **1**ல் கையெழுத்தும், அஞ்சல் ஒப்புதல் அட்டை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குறையில் உள்ள கையெழுத்தும் வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல, ஒன்றாக தான் உள்ளது. வா சா ஆ **1** ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டது அல்ல என்றால் தட்டச்சு செய்யப்பட்டது தான், கையால் எழுதப்பட்வில்லை. வா சா ஆ **1**ல் மூன்று சாட்சிகளும் வெவ்வேறு

பேனாவால் தான் கையெழுத்து போட்டார்கள் என்றால் ஒரே பேனாவால் தான் கையெழுத்து போட்டு என்னிடம் கொடுத்தார்கள். வா சா ஆ 1 ஆவணத்தில் ஆவணம் வரைவு செய்ததாக இதயா கம்பியூர் ஜெராக்ஸ், மெயின் ரோடு வலங்கைமான் என்று உள்ளது என்றால் சரிதான். கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டத்தில் சேர்ந்தது என்றால் சரிதான். வா சா ஆ 1ல் உள்ள வலங்கைமான் திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்தது என்றால் சரிதான். நான் இருக்கும் காஞ்சிவா தற்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். 2020ல் இருந்து காஞசிவா மயிலாடுதுறை மாவட்டத்தை சார்ந்தது என்றால் சரிதான். நான் வருவாய் துறையில் இருந்ததால் கோவிட் காலத்தில் அதே ஊரில் இருந்தேனா அல்லது வெவ்வேறு ஊருக்கு பணி இடமாற்றம் செய்யப்பட்டேனா என்றால் அதே ஊரில் தான் இருந்தேன், உலகம் எங்கும் கோவிட் தொற்று காரணத்தினால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழகத்தில் 24.03.2020 முதல் 14.04.2020 வரையில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த 21 நாட்கள் ஊடரங்கின் போது திருமணம், மருத்துவம் மற்றும் இறப்பு சம்பந்தமாக மட்டும் தான் விதிவிளக்கு அளிக்கப்பட்டது. அப்போது ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கு பயணம் செய்ய முடியாது என்றால் சரிதான். கும்பகோணத்தில் இருந்து காஞ்சிவா 24 கி,மீ தொலைவு இருக்கும். தஞ்சாவூர் மாவட்ட எல்லையில் இருந்து 4 கிமி தொலைவில் துாரத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் காஞ்சிவா உள்ளது என்றால் சரியல்ல. இந்த மாவட்டத்தின் முடிவு அந்த மாவட்டத்தில் ஆரம்பம் ஆகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து நான் குடியிருக்கும் வீடு காஞ்சிவாவில் ஒரு கிமி துாரத்தில் உள்ளது. ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு அமலில் இருந்த காலத்தில் காலத்தில் பிரதிவாதி கும்பகோணத்தில் இருந்து மயிலாடுதுறை மாவட்டத்திற்கு பயணிக்க தடை விதிக்கப்பட்ட காலத்தில் பிரதிவாதி பயணிக்கவும் இல்லை, வா சா ஆ 1 ஐ எழுதிக் கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்ற முறையில் எனது உயர் அதிகாரியிடம் இந்த பணம் கொடுக்கல் சம்பந்தமாக முன் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. வா சா ஆ 1 பிரதிவாதி பணம் பெற்று கொண்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் எனக்கு வேண்டிய நபர்களை கொண்டு என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மகள் மஞ்சுளா மீதும் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மணிமாறன் துாண்டுதலின் பேரிலும் ஜோதிநாயகம் சொல்லி கொடுத்ததன் பேரில் நான் மற்ற சாட்சிகள் உதவியுடன் பிரதிவாதி மற்றும் அவரது மகளையும் துன்புறுத்தும் விதமாக பல்வேறு மேசடியான ஆவணங்களை

தயார் செய்து வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பிரதிவாதி யார் என்று தெரியாது என்றும், ஜோதி நாயகம் மற்றும் மணிமாறன் சொல்லி கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 1ல் 08.04.2020 தேதி மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், குத்தால் தாலுக்கா என்று கணினி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மயிலாடுதுறை மாவட்டம் என்பதது 2022 ல் தான் தனிமாவட்டமானது என்றும், நான் வேண்டும் என்றே தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 1 ஆவணம் மேசடியானது என்றும், அதன் படி பிரதிவாதி தொகை பெற்று கொள்ளவில்லை என்பதாலும், நான் தாக்கல் செய்த தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வா சா ஆ 1ல் பரசுராமனின் கையெழுத்து முதல் சாட்சியாக உள்ளது ஆகும். அந்த கையெழுத்து பரசுராமனின் கையெழுத்து என்றும், வேறு யாருடைய கையெழுத்து என்றால் சரியல்ல. வழக்கில் கோரிய எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்க கூடாது என்றால் சரியல்ல.